கொட்டகல பிரதேச சபை - 2022

------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொட்டகல பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான மற்றும் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொட்டகல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது

குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் வெளித்தரப்பினருக்கு எதிராக தொடரப்பட்டுள்ள 04 வழக்குகள் தொடர்பாக நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை | 2023.12.31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தப்படுவதாக | நிதிக் கூற்றுகளில் தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டுக்குரிய ரூபா 669,600 ஆன விளம்பர பதாகை வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டிற்குரிய பெறவேண்டிய விளம்பர பதாகை வருமானம் ரூபா 310,400 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2023.12.31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்குவதாக | வருமானம் சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டுமென |
| (ஆ) முன்னைய ஆண்டுக்கு கிடைத்த முத்திரை வரி வருமானம் ரூபா 2,506,257 குறைத்தும் பெற வேண்டிய முத்திரை கட்டணங்கள் 951,378 அதிகரித்தும் முன்னைய ஆண்டிற்காக பெறவேண்டிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூ 2,406,257 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 4,462,667 கூடுதலாக காண்பிக்கப்பட்டு இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 680,268 ஆன 15 கடன் மீதிகள் கடன் கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | 2023.12.31 இல் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | சீராக்குவதாக | |
| (உ) அபிவிருத்தி செயற்திட்ட உடன்படிக்கை பெறுமதியை விட பட்டியல் பெறுமதி குறைவாக இருக்கையில் எஞ்சிய தொகையை சீராக்கம் செய்யாமை காரணமாக 24 நிர்மாணங்களின் மிகை ஒதுக்கீடு ரூபா 2,473,276 தொகை கடன் கொடுத்தோரின் கீழ் தொடர்ந்தும் காண்பிக்கப்பட்டு இருந்தது | | - மேற்படி - | கணக்கு மீதிகள் சீராக்கப்பட வேண்டும் |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | உள்ளுராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | | | |
| i | 2016 மார்ச் 17 ஆந் திகதிய மம/உ_ஆ/2016/03 ஆம் இலக்க சுற்றறிக்கை | பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடொன்றை பெற்றுக் கொள்ளாமல் 37 கடைகளுக்கு 2014 ஆம் ஆண்டின் போது வருமான பரிசோதகரால் மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை மீளாய்வாண்டு வரையிலும் அறவிடப்பட்டு வந்தது. | 37 கடைகளுக்காக இதுவரை மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வில்லை என | சுற்றறிக்கை அறிவுறுத்தல்க ளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| ii | 1988 மே 17 ஆம் திகதிய 1988/22 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதவரி மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் 2008 ஆம் ஆண்டின் பின்னர் சபை அதிகாரப் பிரதேசத்தில் வீதவரி ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | மதிப்பீட்டு திணைக்களத்திற்கு வேண்டுகோள் விடுக்கப் பட்ட போதும் செயற்பாடு இதுவரை நிறை வேற்றப்படவில்லை என்பதாக | சுற்றறிக்கை அறிவுறுத்தல்க ளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,041,249 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,404,452 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | வருமான மூலம் | 2022 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2022 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2021 பட்டியலிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 3,495,000 | 3,520,433 | 3,373,986 | 4,347,392 | 3,545,000 | 3,478,673 | 3,837,390 | 4,200,945 |
| (ii) | வாடகை | 3,201,000 | 2,157,361 | 1,978,529 | 726,629 | 1,370,000 | 1,936,676 | 1,922,761 | 547,796 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 2,058,700 | 122,166 | 109,957 | 22,794 | 1,250,200 | 1,779,821 | 1,697,946 | 10,585 |
| (iv) | ஏனைய வருமானம் | 25,383,000 | 28,767,699 | 20,002,960 | 19,886,973 | 51,739,720 | 20,746,394 | 45,128,066 | 11,122,234 |
| | | 34,137,700 | 34,567,659 | 25,465,432 | 24,983,788 | 57,904,920 | 27,941,564 | 52,586,163 | 15,881,560 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதவரியும் வரியும் | | |
| i | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்படும் ரூபா 1,429,654 ஆன நிலுவை வீத வரி மற்றும் உரிமையாளர் இணங்காணப்படாத 433 ஆதனங்களிலிருந்து ரூபா 1,106,278 ஆன வீத வரிகள் அறவிடப்பட்டு இருக்கவில்லை | அரச திணைக்களங்களில் இருந்தும் விடப்பட வேண்டிய பணத்தை பணத்திற்காக வழக்கறிஞர் மூலம் அறிவித்தல் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இனங் காணப்படாத ஆவணங்களை இனங் கண்டு நிலுவைத்தொகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| ii | சபைக்குச் சொந்தமான 40 காணித் துண்டுகளின் குத்தகையாளர்களிடமிருந்து 4 மாதங்கள் முதல் 155 மாதங்கள் வரையான காலப் பகுதிக்குரிய ரூபா 137,429 ஆன குத்தகை வாடகை அறியப்பட்டிருக்கவில்லை | இக்காணியை குத்தகைக்கு வழங்கும் போது நுவரெலியா பிரதேச சபையினால் சட்ட ரீதியான நடைமுறை ஒன்று பின்பற்றப்படா திருந்தமையால் அத்தொகையை அறவிடுவதில் சிக்கலான நிலைமை தோன்றியுள்ளதாக | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | வாடகை | | |
| | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 41 கடைகள் இருந்து 01 மாதம் முதல் 22 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 361,267 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்<br>மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரி களிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 6,822,415 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 13,064,558 ஆக இருந்தது. | பிரதம செயலாளரிடமிருந்து மீளநிரப்புவதக | வருமானத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 93 முதல் 95 வரையான பிரிவுகளின் பிரகாரம் மல போக்குவரத்து மற்றும் கழிவுப் பொருள் எடுத்தல் பிரதேச சபையால் நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் சபை ஆரம்பிக்கப்பட்டு 4 ஆண்டு காலம் கடந்த போதும் கலீ வண்டி சேவை சபையிடம் காணப்படவில்லை | கலீ பவுசர் வண்டி ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக சபையிடம் நிதிசார் வளம் இல்லாமை காரணமாக | சட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஒழுங்கைகள் நிர்மாணித்தல் மேம்படுத்துவதற்காக சபை நிதியத்தில் இருந்து எந்த ஒரு தொகையும் ஈடுபடுத்தாமல் இருந்ததுடன் வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுவ தற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுங்கைகள் நிர்மாணித்தல் மேம்படுத்துவதற்காக சபையின் நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சட்ட செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (இ) | பிரதேச சபைகள் சட்டத்தின் 79 மற்றும் 80 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பொது வடிகான்கள் நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் கொட்டகல வணிகசேகரபுர வீடுகளின் ஊடாகப் பயணிக்கும் வடிகாண் 50 ஆண்டுகால பகுதியில் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. பௌதீக பரிசோதனையின் | இந்த வடிகாண் முறைமையை நிர்மாணிப்பதற்கு அதிக பணம் செலவாகும் என்பதால் சபையின் நிதி அளவின் பிரகாரம் அந்தந்த சந்தர்ப்பத்தின் அடிப்படையில் | திருத்த வேலைகளை நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | வடிகாண் முறைமை மிகவும் உருக்குலைந்த நிலையில் காணப்பட்டது. | மதிப்பீடு தயாரிக்கப்பட்டு செயற்படுத்துவதற்கு உள்ளதாக | |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 மலசல கூடங்களுக்காக உறுதிகள் மற்றும் திட்டங்கள் இல்லாமை காரணமாக சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | மலசலகூடங்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதாக | மலசலகூடங்கள், சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட காணி ஏல விற்பனையில் பொது காணியொன்றாக பயன்படுத்து வதற்காக சபைக்கு கிடைத்திருந்த 160 பேர்ச் அளவிலான ஆகயில் பிரதேசத்தின் தேயிலைச் செய்கை உடனான காணி, சபையின் செலவில் வலை வேலி பொருத்தி சபையின் ஊழியர்களை ஈடுபடுத்தி தேயிலை கவாத்து இடப்பட்டிருந்தது. சபையினால் முறையாக பராமரித்து செல்லப்படுகின்ற காணியின் வருமானத்தை கடந்த 7 ஆண்டுகளில் வெளிநபர் ஒருவரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் இக்காணியிலிருந்து எவ்வித வருமானம் ஒன்றும் சபைக்கு கிடைக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டு காணியை 30 ஆண்டு காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கு சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் வெளிப்படையாக இரண்டு பத்திரிகைகளில் விளம்பரம் செய்து கேள்வி கோரி ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விதாரர் ஒருவரை தெரிவு செய்துகொள்வதாக | சபையின் வருமானத்தை முறையாக சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது உடன் காணியை கையேற்ற நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

## 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதன திண்ம கழிவுப்பொருள் முகாமைத்துவ பிரிவிற்கு அண்மித்த காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரிய காணியின் ஒரு பகுதியில் அத்துமீறி பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற இரண்டு பேருக்கு சேதனப் பசளை தொகுதி ஊடாக நுழைவு வீதி ஒன்று வழங்கப்பட்டிருந்தது | முன்னாள் தலைவரால் இதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்ததாக | அத்துமீறிய நுழைவு வீதிகள் அகற்றப்படவேண்டும் |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கழிவுப்பொருள் தொகுதிகள் பகுதியுடன் கூடிய காணியை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | காணியை பிரதேச சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | பிரதேச சபை புறம்பாக ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் அப்பிரதேச சபைக்காக அடிப்படை வசதிகளை வழங்கும் நோக்கில் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் மூலம் 2020 ஒக்டோபர் 05 ஆம் தேதி வழங்கப்பட்ட ரூபா 1,192,670 ஆன அலுவலக உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் அலுவலகத்தின் கீழ் மாடியில் களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | அலுவலகம் ஒன்று இல்லாமையால் இந் நிலைமை உருவாகியுள்ளதாக | உபகரணங்களை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபைக்குரிய ஆகயில் விளையாட்டரங்கு இடத்தின் ஒரு பகுதி அத்துமீறிய குடியிருப்பாளர்கள் கைப்பற்றியிருந்ததுடன் விளையாட்டு அரங்கை சுற்றி எல்லை வேலி அமைத்து பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட இருக்கவில்லை. | குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | அத்துமீறிய குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

### 3.5 செயற்திட்டங்கள், இலக்குகள் அல்லது மூலதன வேலை தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 2015 மே 11 ஆம் திகதி ரூபா 83,373,432 இற்கு உடன்படிக்கை செய்து நிர்மாணம் கையளிக்கப்பட்டு 2016 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் அதற்காக ரூபா 21,559,211 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. நிர்வாக மற்றும் தொழிநுட்பச் சிக்கல் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையிலும் அதன் வேலைகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | மத்திய மாகாணத்தின் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் மூலம் இச்செயற்பாட்டை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிர்மாணங்களைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 3.6 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,000,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்ட ஷாமஸ் கொங்கிரீட் வீதியை வாகனப் போக்குவரத்துக்கு பயன்படுத்தக்கூடிய வகையில் 08 அடி அகலத்தில் அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் வீதியின் | எதிர்காலத்தில் இந்த இடத்தில் வடிகால் முறைமை ஒன்றை தயாரிப்பதற்காக திட்டமிடப்பட்டு தோட்ட வீடமைப்பு மற்றும் | எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும் |

| | |
|---|---|
| அகலம் 4 ½ அடியாக இருந்தமையால் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்று வதற்கு முடியாமல் இருந்தது | உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் நிதியிலிருந்து பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் பதவி அணியில் 14 பதவிகளில் 38 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதில் சுகாதார தொழிலாளர் பதவிகள் 17 வெற்றிடங்களை காணப்பட்டமையால் சபையின் கழிவுப்பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் தடையொன்று காணப்பட்டது | கணக்காய்வின் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் குறித்த குறைபாடுகளை தீர்வு செய்வதற்காக உயர் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது | வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | சேவை விட்டுச் சென்ற ஊழியர் ஒருவரிடமிருந்து ரூபா 201,120 கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை | பிணை கைச்சாத்திட்ட நபரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக | கடன் மீதிகள் அறவிடப்பட வேண்டும். |

**3.8 வாகன முறைமை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஏப்ரல் 05 ஆம் திகதி விபத்துக்கு உட்பட்ட வாகனம் ஒன்று தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம் பரிசோதனையொன்று இடம் பெற்றிருக்கவில்லை | உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடம் இருந்து கிடைக்கும் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | பரிசோதனை ஒன்றை நடாத்தி தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் |
| (ஆ) | நுவரெலியா பிரதேச சபையால் 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த 4 வாகனங்களின் உரித்து கையேற்கப்பட்டிருக்க வில்லை | வாகனங்களை சபைக்கு கையேற்பதற்காக தேவையான விண்ணப்பங்களை நுவரெலியா பிரதேச சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக் | உரித்தைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஈ உள்ளூராட்சி மன்ற முறைமையை செயற்படுத்துவதற்கான சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்று 2021 ஜூன் 17 ஆம் திகதி வடிவமைக்கப்பட்டு வந்த போதும் இறுதி | சபைக்கு உத்தியோகபூர்வ இணையத்தளம் ஒன்றை வடிவமைத்து வருவதுடன் தற்போது | பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| வரையிலும் அதன் நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை | அச்செயற்பாடு 80 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக | |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வான்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினம், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுக்கு இடையே ஒப்பிடும் போது 06 வருமான விடயங்களில் 07 சதவீதம் முதல் 47 சதவீதம் வரையிலும் 06 செலவின விடயங்களில் 18 சதவீதம் முதல் 100 சதவீதத்தை மிகைத்தும் விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்க பூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதாக | தேவைப்பாட்டினை கருத்திற் கொண்டு அவதானத்துடன் பாதீடு தயாரிக்கப்பட வேண்டும் |

**4.3 சுற்றாடல் சிக்கல்கள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பதன திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவ தொகுதியில் கழிவுப்பொருள் மீள் சுழற்சி இடம்பெறாமல் இருந்ததுடன் அனைத்து கழிவுகளையும் கலப்பாக பெற்று சுற்றாடலுக்கு வெளியேற்றப்பட்டிருந்தது. பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் முறைப்படி சேகரித்து வைப்பதற்கு இடமொன்று தயார் செய்யப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாக | முறைப்படி திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். |